14-08-2024

MCOP. No.13/2023

ம.சா. 1 – திரு.ஜீவகுமார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு 3-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:

16.07.2022 அன்று விபத்து நடந்தது. நான் இவ்வழக்கினை 19.01.2023 அன்று தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். விபத்து நடைபெற்று ஆறுமாத காலத்திற்குள் நான் இவ்வழக்கினை தாக்கல் செய்யாததால் காலதாமத தோஷத்திற்குட்பட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல, நான் ஆறுமாத காலம் தொடர்சிகிச்சையில் இருந்ததால் என்னால் நீதிமன்றத்திற்கு நேரடியாக வர இயலாதநிலையில் வீடியோ கான்பரன்ஸ் மூலமாக நான் ஆஜராகி எனது மனு கோப்பிற்கு எடுக்கப்பட்டது. அவ்வாறு காலதாமதமாக மனு தாக்கல் செய்யப்பட்டதை மன்னிக்ககோரி தனியாக நான் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை. விபத்து சம்பந்தமான புகாரினை நான் காவல்நிலையத்தில் கொடுத்தேனா என்றால் நான் விபத்து ஏற்பட்டு தெளிவான மனநிலையில் இல்லாததால் நான் தான் கொடுத்தேனா என்றால் முழுமையாக சொல்ல இயலவில்லை, எனது மருத்துவர் மூலமாக காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டு விசாரித்தார்கள். எனது மோட்டார் வாகனமான என்பீல்ட் புல்லட்டை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்விற்குட்படுத்தும்போது எனது ஓட்டுநர் உரிமத்தை கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ-5 மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் எனது ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்ததாக காட்டப்படவில்லை. நான் பணிபுரிந்தது பெரியகாரமடை டீ கம்பெனியில் வேலைபார்த்தேன். விபத்திற்கு முன்பாக மூன்று மாதமாக நான் வேலை பார்த்தேன். எனது மாத வருமானத்தின் சிலிப்பை தாக்கல் செய்யவில்லை. பிகேடி டீ கம்பெனி என்பது காஞ்சமலை எஸ்டேட்டுடன் சேர்ந்தது தான். அங்கு வேலை பார்த்ததற்கும், சம்பளம் வாங்கியதற்கும் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், நான் விபத்திற்கு முந்தைய வருடத்திய வருமான வரி கணக்கை தாக்கல் செய்துள்ளேன். ம.சா.ஆ.10 வருமான வரியை காட்டும்

ஆவணத்தில் எனது மாத வருமானத்தை காட்டும் விபரங்கள் உள்ளதா என்றால் சம்பளம் ஆண்டுக்கு ரூ.10,43,840/– நான் பெற்றதாக கணக்கில் காட்டியுள்ளேன். இதை தவிர வேறு வருமானம் எதுவும் வந்ததாக குறிப்புகள் ம.சா.ஆ–10 ஆவணத்தில் உள்ளதா என்றால் இதர வகையில் ரூ.33,000/– இருந்ததாக காட்டப்பட்டுள்ளது. என்னுடைய மாத வருமானம் எனது வங்கிகணக்கில் தான் வரவு வைக்கப்படும். வங்கி கணக்கு பட்டியலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். எனக்கு ஹெல்த் இன்சூரன்ஸ் உள்ளது. ம.சா.ஆ–12 ல் சொல்லப்பட்ட அனைத்து பில்களும் ஸ்டார் ஹெல்த் இன்சூரன்சில் திரும்ப பெற்றதாக குறிப்பு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ–3 ன் அசல் ஆவணம் எங்குள்ளது என்றால் தற்போது நினைவில்லை. ம.சா.ஆ–8, 9 டுப்ளிகேட் பில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது அசல் ஆவணம் ஸ்டார் ஹெல்த் இன்சூரன்சில் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான், ஆனால் நான் செலவுசெய்த மொத்த தொகையும் திரும்ப கொடுக்கப்படவில்லை. ம.சா.ஆ.7 ஆவணத்தில் கண்ட தொகையும் ஸ்டார் ஹெல்த் இன்சூரன்சில் திரும்ப பெறப்பட்ட தொகை என்றால் மொத்த செலவும் எனக்கு திரும்ப பெறப்படவில்லை. கங்கா மருத்துவமனையை தவிர வேறு மருத்துவமனையில் சிகிச்சை எதுவும் எடுத்துக்கொண்டேனா என்றால் முதலுதவி சிகிச்சை வால்பாறையில் உள்ள மருத்துவமனையில் தான் மேற்கொண்டேன், அதன்பிறகு கங்கா மருத்துவமனைக்கு வந்தேன். கங்கா மருத்துவமனையில் நான் சிகிச்சை மேற்கொண்டதற்கான மொத்த பில்களையும் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக உள்ளேன். விபத்து நடந்த ரோடு தென்வடல் ரோடு என்றால் எனக்கு திசை சரியாக தெரியாது. முதல் தகவல் அறிக்கையில் விபத்து நடந்த ரோடு கிழமேல் ரோடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் உள்ள தகவல் சரியானது தான். விபத்து நடந்த ரோடு மூன்று ரோடுகள் சந்திக்கும் இடம் என்றால் சிறியதாக ஜங்சன் இருக்கும், அதற்கு அருகில் நடந்தது. வால்பாறை சாலை மலைப்பகுதியானது என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் ஒரு வளைவு இருக்கும் என்றால் சரிதான். நான்

விபத்து சமயத்தில் மலைபகுதியில் இருந்து இறங்கி வந்து கொண்டிருந்தேனா என்றால் அந்த பகுதி நிலப்பரப்பாக தான் இருக்கும், மலைப்பகுதி இல்லை. காரின் ஓட்டுநர் சாலைவிதிகளை கடைபிடித்து மெதுவாக தான் வாகனத்தை ஓட்டிவந்தார் என்றால் சரியல்ல. கார் எனது வலதுபக்கம் வந்து இடித்தது. ரோட்டின் மையப்பகுதியில் தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. ரோட்டின் மையப்பகுதியில் நடந்ததால் தான் விபத்து சம்பந்தமான வரைபடத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவும், அதிக வேகமாக வந்ததும் தான் காரணம் என்று சொன்னால் சரியல்ல. தற்போதும் நான் டீ எஸ்டேட்டில் வேலை பார்க்கிறேனா என்றால் தற்போது எந்தவேலையும் பார்க்கவில்லை. விபத்திற்கு முன்பு வேலை பார்த்தேன் என்பதற்கும், தற்போது வேலை பார்க்கவில்லை என்பதற்கும் தகுந்த ஆவணத்தை எஸ்டேட்டில் இருந்து வாங்கி தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். எனக்கு இடுப்பில் ஏற்பட்ட காயமும், காலில் ஏற்பட்ட காயமும் கொடுங்காயம் மற்ற காயங்கள் சிறுகாயங்கள் என்றால் சரிதான். பல்வேறு தலைப்புகளின் கீழ் நான் கோரியுள்ள தொகைகள் அதிகமானது என்றும், அந்த தொகைகள் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. விபத்தினால் எனக்கு ஏற்பட்ட காயங்களினால் எனக்கு நிரந்தரஊனம் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பாலிசி விதிமுறைகளை மீறி விபத்து நடந்ததால் 3ம் எதிர்மனுதாரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யபடவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீடுதாரை வழக்கில் சேர்க்காததால் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் இழப்பீடு கோரவேண்டுமென்றால் 1,2 எதிர்மனுதார்கள் மற்றும் நான் ஓட்டிச்சென்ற வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீடு நிறுவனத்திடம் தான் இழப்பீடு கோரமுடியும் என்று சொன்னால் சரியல்ல. நான் 3ம் எதிர்மனுதாரரை கட்சி சேர்த்தது இருசக்கர வாகனத்தின் காப்பீடுதாரர் என்ற நிலையில் தான். நான் இருசக்கர வாகனத்தின் காப்பீடுதாரர் 3ம் எதிர்மனுதாரரை கட்சி சேர்த்தால் 3ம் தரப்பினர் நிலையில் நான் 3ம் எதிர்மனுதாரரிடம் இழப்பீடு கோரமுடியாது

என்று சொன்னால் சரியல்ல. பாலிசி விதிமுறைகளை மீறி 3ம் எதிர்மனுதாரரை நான் கட்சி சேர்த்தது சட்டப்படி சரியானதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

1,2ம் எதிர்மனுதார்கள் தரப்பில் குறுக்குவிசாரணைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

*Taken down by me/before me in open Court,*
*interpreted/read over to the witness and*
*admitted by the deponent to be correct.*

K KAVITHA
Digitally signed by K KAVITHA
Date: 2024.08.14 18:41:35 +0530

Chief Judicial Magistrate,
Theni.